★ இளாலி கடலில் தாக்குதல்; படகு மூழ்கடிப்பு; ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

இளாலிக் கடலில் நேற்று முன்தினமிரவு பொருட்களுடன் வந்த படகுகள்மீது கடற்படையினர் கடும் தாக்குதல் நடத்தியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆலங்கேணியிலிருந்து நேற்று முன்தினம் இரவு இளாலி நோக்கி நான்கு படகுகள் பொருட்களுடன் வந்தபோது இவற்றின் மீது திடீரென வந்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடாத்தினார்களாம்.

இத்தாக்குதலில் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் அதில் வந்த இளைஞர் உயிரிழந்ததாகவும், அவரது

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 15 இதழ் 16
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26 02 1993

## எந்த குழுவுக்கும் ஆயுதங்களை அரசு வழங்ககூடாது

நாடாளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்கு எந்தவொரு குழுவுக்கும் ஆயுதங்களை வழங்கும் தவறை இனியும் அரசு செய்யக்கூடாது படையினருக்கு மட்டுமே ஆயுதங்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு திருமலை மாவட்ட எம். பி. திரு ஜே. திவ்வியநாதன் நேற்று நடாளுமன்றில் அவசரகாலசட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

வெல்லமுடியாத யுத்தம் நடைபெறுகிறது அறிவும் விருப்பமில்லாத இந்த சட்டத்திற்கு யாருக்களிக்கிறோம் இந்த யுத்தத்தால் அப்பாவிகளே உயிரிழக்கிறார்கள்

வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த அரசு முயலக்கூடாது என்றார்.

# மன்னாரில் 7 காவலரண்கள் அழிப்பு

# 5 படையினர் பலி; 9 பேர் படுகாயம்

## 11 புலிகள் வீரச்சாவு

(மன்னார்)

மன்னார் - நாணுட்டான் இராணுவ முகாம் காவலரண்கள்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் ஏழு காவலரண்களும், இராணுவ விடுதியும் முற்றாக அழிக்கப்பட்டதுடன் ஐந்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். 9 பேர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

நாணுட்டான் இராணுவ முகாமுக்கும் கட்டைக்காடு இராணுவ முகாமுக்குமிடையில் உள்ள 7 இராணுவ காவலரண்கள் மீதும் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பத்து நிமிடங்கள் நடைபெற்ற இந்த அதிரடித் தாக்குதலில் 7 காவலரண்களும் இராணுவ விடுதியும் முற்றாக அழிக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கி-1, இதற்குரிய ரவைக் கூடுகள்-7, தோட்டாக்கள்-833, 60 மி. மீ. எறிகணை செலுத்திகள்-2, இதற்குரிய எறிகணைகள்-15, ஆர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொடர்பில்லை நக்ஸலைட் தலைவர் அறிவிப்பு

(ஹைதராபாத்)

ஆந்திராவில் இயங்கும் மக்கள் செல்வாக்கு மிக்க நக்ஸலைட் அமைப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு எதுவுமில்லை என அதன் தலைவர் கிராந்திரணவே அறிவித்துள்ளார்.

ஆந்திராவில் காங்கிரஸ் எம். பி. ஒருவரை கடத்தி அவரை பணயம் வைத்து பின் விடுதலை செய்யப்பட்டபோது கிராந்திரணவேயும் விடுதலை பெற்றார்.

இவர் நேற்று இந்திய வானொலி நிருபருக்கு அளித்த பேட்டியிலேயே தங்கள் நக்ஸலைட் அமைப்பிற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை எனக்கூறினார். (சி)

### மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி சேகரிக்க 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் முற்பகல் 9-00 — 10-00 மணிவரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கடனை செலுத்த முடியும். (சி)

## 23 ராணுவம் மீது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

இலங்கை அரசு 23 இராணுவத்தினர்மீது சிவில் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. வழக்கு அடுத்த வாரம் இடம்பெறும் என்றும் அறிவித்துள்ளது

டென்சில் கொப்பேகடுவ உட்பட பத்து இராணுவ அதிகாரிகள் அராலித்துறையில் குண்டு வெடித்து மரணமான சம்பவத்திற்கு பின்பு மட்டக்களப்பு மயிலந்தனை

(4-ம் பக்கம் பார்க்க)

★ வடபகுதியில்

## அப்பாவி மக்களை அழிப்பதாக விமானப்படை மீது கண்டனம்

(கொழும்பு)

வடக்கில் அப்பாவிப்பொது மக்களை விமானப் படையினர் தாக்கி அழித்து வருகிறார்கள் என விமானப் படையினர் மீது பலத்த குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

விமானப்படையினரின் தாக்குதல்களில் அதிகமாக பொது மக்களும் அவர்களின் சொத்துக்களுமே சேதமாக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது

இரத்மலானை விமானப் படை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இக்குற்றச் சாட்டை பற்றி பல பத்திரிகையாளர்கள் கேள்விகள் தொடுத்தபோது விமானப் படைத் தளபதி எயர் மார்சல் ரெரன்ஸ் குணவர்தன மறுப்பு தெரிவித்ததோடு இக்குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் தெரிவித்தார் (சி)

## பி.ஜே.பியின் டில்லிபேரணி படை அதிரடியால் முறியடிப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக்கட்சி

### பல தலைவர்களும் தாக்குண்டனர்

நேற்று புதுடில்லியில் நடாத்த முற்பட்ட பேரணியை இராணுவமும், பொலிஸாரும் கூட்டாக முறியடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் உள்ள போட் கிளப்பை நோக்கிப்புறப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## தேநீர் அருந்திய 20 ராணுவம் மயக்கம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் தேநீர் அருந்திய 20 இராணுவத்தினர் மயங்கிய நிலையில் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

நேற்றுக் காலை மேற்படி

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் செயலகம் முன் நேற்று மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் ஏற்பட்டுள்ள பட்டினிச்சாவுகளைத் தடுக்குமாறும், திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளை நீக்குமாறும், பூநகரி சங்குப்பிட்டிப் பாதையைப் பாவனைக்கு ஏற்றதாக்குமாறும் கோரி நேற்றுக்காலை 7 மணி முதல் 11மணிவரை நல்லூர் பிரதேச செயலகத்தின் முன்னால் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதன்காரணமாக பிரதேச செயலகத்தின் அனைத்துக்கடமைகளும் ஸ்தம்பிதமடைந்தன.

இப்போராட்டத்தில் கல

4-ம் பக்கம் பார்க்க)

ஜே. வி. பி. பெரும் அச்சுறுத்தல்——

## தென்பகுதிக்கு படையினரை அனுப்பும் நிலை ஏற்படலாம்

(கொழும்பு)

தென்பகுதியில் ஜே. வி. பி. யினரின் வளர்ச்சி தீவிரமடைந்து வருவதாலும் பாதுகாப்பு நிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டு வருவதாக அரச அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தெற்கில் ஜே. வி. பி. நடவடிக்கை குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிரவிசாரணைகளை கடந்த ஒருமாதமாக மேற்கொண்டு வருவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பாடசாலை புத்தளத்தில் தீக்கிரை

(புத்தளம்)

புத்தளத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்று அண்மையில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் பெரும்பதற்றநிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கள் சிலர் பயத்தினால் கொழும்பிற்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இப்பகுதியில் முஸ்லிம், சிங்களவர்களிடையே

(4-ம் பக்கம் பார்க்க)

உளவாளிகள் !!!

அவதானமாக இருக்கவும் - - - !
கண்ணால் பார்த்தவற்றை, காதால்
கேட்டவற்றை, மனதால்உணர்ந்தவற்றை
மற்றவர்க்குக் கூறாது எம்மண்ணைக்
காத்திடுவோம்.

★ தொண்டர் நிறுவன பிரதிநிதிகள்

## யாழ். நகர் வராமலே கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பார்வையிடுவதற்காக கடந்த 23ம் திகதி கொழும்பிலிருந்து வந்த சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் யாழ். நகரைப் பார்வையிடாமலே திரும்பிச் சென்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ இளாலி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

இளாலி பூநகரி படகுசேவை 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. (சி)

## வரி விளம்பரம்

### எண்சோதிடம்

சரியான முறையில் வாழ்க்கையில் வெற்றியடைய நாடுங்கள். Shyanbugee பெயரைக் கொண்ட E. V. K. Anpalagan கட்டணம் ரூபா 50/- மட்டும். 50/44 வயிரவ கோவிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம். (இ-7263)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7260)

### விற்பனைக்கு

தபக்காலத்திற்கு ஏற்ற செபப் புத்தகங்களான சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள், திருமணித்தியாலச் சிலுவைப் பாதை, கல்வாறைச் செபம் விற்பனைக்குண்டு. "ஆவே மரியா" புனித சிந்தாத்திரை மாதா கைத்தொழில் நிலயம், 69/4, மவுன்காமல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். இல 92 கே கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி-7262)

### தேவை

இரக்க சிந்தையுள்ள பொறுப்பற்ற பண்பானகுடும்பத்துக்கு சைவபோசன 25-40 வயதுக்குள் பெண் உதவியாளர் தேவை. விதவை/அநாதைகளுக்கு முன்னுரிமை பிற்கால சீவியம்/ படிப்புக்கும் உதவப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 7266 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-7266)

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். நாவன்மார்கட்டு சனசமூக நிலயத்தின் ஆதரவில் நிலயத் தலைவர் திரு. க. கேந்திரன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை 6 மணிக்கு நிலயத்தில் அறிவியலரங்கும், உருவப்படத் திறப்பு நிகழ்வும் இடம்பெறும். (154)

0 0

(புலோலி

பொலிகண்டி கிழக்கு கந்தவியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய நூதன மஹோற்சவம் இன்று 26-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பவாகும்.

மாசி மாதம் 6ம் திகதி சனிக்கிழமை ரதோற்சவமும், மறுநாளான 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (61

0 0

வட்டுக்கோட்டை உடுக்கியவளை பிள்ளையார் கோயில் பஜனை மன்றத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா மேற்படி ஆலயமண்டபத்தில் இன்று 26-ம திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 26-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி க. மோகனதாஸும் அவரது பாரியாரும் கலந்துகொள்கின்றனர். (161

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் 2-ம் ஆண்டு நிறைவு விழா இன்று கல்லூரி திறந்தவெளியரங்கில் கல்லூரி அதிபர் திரு. இ. சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# புல்லாங்குழல் இசை அரங்கேற்றம்



புல்லாங்குழல் இசை வழங்குபவர்

நாதஸ்வர இசைமேதை

**வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள்**

இடம்: அகில இலங்கை இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம் சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 26-02-1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணி

தலைவர்: வைத்திய கலாநிதி ரி. கெங்காதரன் அவர்கள்

பிரதம விருந்தினர்: சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சிறப்பு விருந்தினர்: திரு புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், தமிழீழ கலை பண்பாட்டுக்கழகம்)

அணிசெய் கலைஞர்கள்:

வயலின்: இசைஞான திலகம் ஆர். இராதாக்கிருஷ்ணன்
மிருதங்கம்: கலாவித்தகர் கே. கண்ணதாசன்
தவில்: தவில் வித்துவான் ரி. கணேசன்
கெஞ்சிரா: திரு எஸ். நாகராஜன்
தம்புரா: திரு. என். சண்முகலிங்கம்

வாழ்த்துரை வழங்குபவர்கள்:

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

சிவஞான பாஸ்கரன் சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள்

இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ என் வீரமணி ஐயர் அவர்கள்

நவாலியூர் திரு. என். சச்சிதானந்தம் அவர்கள்

இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் (தலைவர் அ. இ. இளங்கலைஞர் மன்றம்)

திரு த. சிவகுமாரன் அவர்கள் (ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர், அ. இ. கம்பன் கழகம்)

நன்றியுரை:

நாதஸ்வர வித்வான் வி. கே. கானமூர்த்தி

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அழைப்பாளர்கள்:

நாதஸ்வர வித்வான் கே. ஆர். சுந்தரமூர்த்தி
நாதஸ்வர வித்வான் வி. கே. கானமூர்த்தி
நாதஸ்வர வித்வான் எஸ். ஏ. மகேந்திரன்

விசேட ஒலி - ஒளி

ஒலி: நித்தி சவுண்ட்ஸ், யாழ்ப்பாணம்.
ஒளி: மனோலைற், கோப்பாய்.

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

வாழ்த்துபவர்:- S. தில்லையம்பலம்

**விநாயகர் பொறியியல் வேட்டை,**

கோண்டாவில் மேற்கு. (எ-2907)

## பஸ்ஸில் குண்டு வெடிப்பு மூவர் பலி!

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பயணிகள் பஸ் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் 3 பேர் பலியாகினர். 30 பேர் வரை படுகாயமடைந்தனர். (கே)

DIPLOMA/ POSTGRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1991 — 92

Letters have been posted to the selected candidates to registrar for the above course before 1993-03-01 and to meet the Head/ English Language Teaching Centre on 1993-03-01 at 9-00 a m at his office. The list of selected candidates is displayed in the University Notice Board.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
JAFFNA.

1993-02-25.

(A-2916)

# நாதக்குழல் ஊதி

நமையெல்லாம் உருக வைப்போய்!

வேய்ங்குழலும் ஏந்து!

காற்றுக்குச் சுவைகொடு!!

செவியேந்தும் இசையுண்டு

மெய் சிலிர்க்க!!!

அன்புடன் வாழ்த்துபவர்கள்

| | | |
|---|---|---|
| சிங்கம் பார்மஸி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | பரணி பார்மஸி, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | யாழ்.கண்ணாடி நிலையம், 234, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் / எக்ஸ்போ பேணிச்சேர்ஸ், 441, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |

(ஏ-2914)

# மாதகலில் இடம்பெற்ற படை நடவடிக்கையின் நோக்கம் புரியாத புதிராகவே உள்ளது - பி. பி. ஸி. விமர்சனம்

கொழும்பு,

யாழ் குடாவில் மாதகல் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட படை நடவடிக்கை எதுவித பயனுமின்றி முடிவடைந்துள்ளது. இந்த நடவடிக்கையின் நோக்கம் பெரும் புதிராகவே அமைந்துள்ளதாக "பி. பி. ஸி." விமர்சனம் செய்துள்ளது.

அந்த விமர்சனத்திில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளுக்கெதிரான தாக்குதல்கள் வலிகாமம் மேற்குப்பகுதியில் சிறிலங்கா ராணுவத்தால் மும்முனைகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் சிறிய அளவிலான தாக்குதல்களை முடித்துக் கொண்டு ராணுவத்தினர் தங்கள் முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர் என்று ராணுவம் அறிவித்துள்ளது.

ராணுவத்தளபதியின் கூற்றுப்படி கடந்த ஆண்டு கைப்பற்றப்பட்ட பகுதியிலேயே இந்த ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பது விளங்காத புதிராகவே இருக்கிறது.

செவ்வாய்க்கிழமை அதிகாலையிலிருந்து குடாநாடு பூராக காலவரையற்ற ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது. அத்தோடு கடற்படையினரும், விமானப் படையினரும் தாக்குதல்களை அதிகாலையிலேயே ஆரம்பித்திருந்தனர்.

யாழ். குடாநாட்டில் ராணுவத்தின் ஒரே பாதுகாப்பு தளமாக இருக்கும் பலாலியிலிருந்து அதிகாலை வெளியேறிய ராணுவத்தினர் மாதகலை நோக்கி நகர்ந்தார்கள்.

மாதகலிலுள்ள தளத்திற்கு மேற்கே போராளிகள் காலூன்றி இருப்பதால் அவர்களை அழித்தொழிப்பதே ராணுவத்தின் நோக்கமாக இருந்ததென்று ராணுவத்தளபதிகள் கூறுகிறார்கள்.

ஆனால் இதே இடங்களைத் தாங்கள் கைப்பற்றி இருப்பதாக கடந்த ஆண்டில் ராணுவம் கூறியிருந்தது. அப்படியானால் ஏன் இப்போதைய நடவடிக்கை?

அப்படியானால் ஒன்று தெளிவாகிறது. போராளிகளின் வசமான இந்த வட்டகையில் ராணுவ நடவடிக்கை மூலம்ராணுவம் தாம் பிடித்துவிட்டதாகக் கூறுவது நம்பகமானதல்ல. ஏனெனில் பிடித்த இந்த இடங்களில் ராணுவம் நிலைத்து நிற்க முடியவில்லை என்று தற்போது எண்ணத் தோன்றுகிறது.

இத்தாக்குதலில் அரசபடைகளுக்கு இழப்பு எதுவுமில்லையாம். அதுகூட, சண்டை நடந்திருந்தாலும் அல்லது மிகச் சிறிய சண்டை அல்லது மோதலே இல்லை என்றுதான் அர்த்தம் கற்பிக்கவேண்டியுள்ளது. ஆனால் ஈடுபடுத்தப்பட்டவை யுத்த விமானங்களும், கப்பல் பீரங்கிகளுமேயாதலால் புலிகளுக்கு பலத்தசேதம் மேற்பட்டிருக்க வேண்டுமென படைத்தளபதிகள் கூறுகின்றனர். இதில் எவ்வளவு உண்மை எவ்வளவு பொய் என்பது புரியாத புதிராகவுள்ளது.

யாழ். குடாவில் போடப்பட்ட ஊரடங்கும் புதன்கிழமை நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் இங்கு வாழும் மக்கள் கடந்த மூன்று ஆண்டுகளாகப் போடப்படும் ஊரடங்கு உத்தரவோடு பழக்கப்பட்டுவிட்டார்கள். ராணுவத்தினருக்கும் இந்த உத்தரவை அமுலாக்குவது இயலாது தோன்றும்.

கடந்த டிசம்பருக்குப் பின் வடக்கே ராணுவத்துக்கும், புலிகளுக்குமிடையே பாரிய மோதல்கள் இடம்பெறவில்லை. இடம்பெற்ற மோதல்களில் பெரும்பாலானவை கிழக்கிலே நடந்துள்ளன. அங்கே தமது அதிகாரத்தை நிறுவுவதே படையினரது நோக்கமாக தெரிகிறது. மேலும் சிறு அளவிலே அங்கே ராணுவ நடவடிக்கை இடம்பெறலாம் போல் தெரிகிறது.

தற்போது கிழக்கிலே உண்மையில் அரச பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் பகலும், போராளிகளின் கட்டுப்பாட்டில் இரவும் திகழ்கிறது. இது தான் அங்கு காணும் நிதர்சனம். (தே-சி)

## இராசி பலன்

26-02-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மாசி 15)

பஞ்சமி பி.இ. 3-53 வரை, அச்சுவினி பி.இ. 1-24 வரை, அமிர்த சித்தம், சுரிநாள், இராகு காலம் காலை 10-59 முதல் 12-29 வரை, சுபநேரம் காலை 6-29 முதல் 7-59 வரை.

மேடம்: தர்மசிந்தனை உறவினர் விசுவாசம், புதியஉறவு.

இடபம்: மனதில் குரோதம், கோபக்குறி, ஏமாற்றம்.

மிதுனம்: விந்தை ஞானம், மனச்சந்தோசம், பணவரவு.

கடகம்: நியாயம் கற்பித்தல், தொழில் சிறப்பு, காரியசித்தி.

சிங்கம்: குடும்ப விவகாரம் விரக்தி நிலை, அகாலபோஜனம்.

கன்னி: கடினமானபோக்கு, கெட்டவார்த்தை, மனச்சஞ்சலம்.

துலாம்: வசக்கு வசீகரம், காரிய அனுகூலம், பெண் உதவி

விருச்சிகம்: இனசனவருகை, தொழில்உறவு, கற்பனைமிகுதி

தனுசு: பொதுசன விரோதம், காரியத்தடை, வெறுப்பு.

மகரம்: கலை சிந்தனை, தொழில் நஷ்டம், உடல் உபாதை.

கும்பம்: விருந்தினர் சகவாசம், காரிய சித்தி, புகழ்.

மீனம்: கருத்து வேற்றுமை, குடும்பக்கஷ்டம், மனச்சுமை.

ஜோஸியர்

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்டமத்தியஸ்தர் சங்கம், விளையாட்டுக் கழகங்களிடையே அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியை நடாத்திவருகின்றது.

மேற்படி போட்டியில் இன்றைய ஆட்டத்தில் முதலில் சென்.அன்ரனிஸ் கழகமும் அரியாலை ஐக்கிய கழகமும் மோதுகின்றன. 2-வது ஆட்டத்தில் சென்.மேரிஸ் கழகத்தை எதிர்த்து சென்.ரேகஸ் கழகம் மோதுகின்றது. (வி)

## தவக்கால நற்சிந்தனை

"பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு" (இசை 58 : 7) கடவுள் விரும்பும் நோன்பு எது என்பதை நாம் மனத்தால் உணரவேண்டும் எமது அக்கிரமங்களை இந்நாட்களில் நாம் விட்டொழித்து, நம்மை அழுத்திநிறுத்தும் நுகத்தடிகளை இறக்கி, சுமைகளை உடைத்து, உணவின்றித் தவிக்கும் எம் அயலவனுக்கு உணவூட்டி, இருக்க இடமின்றித் தவிப்போர்க்கு தங்க இடமும், உடுத்த உடையும் கொடுத்திருப்பதே மேலான நோன்பாகும்.

— யோ. தார்சீசியஸ்.

நாதஸ்வர மேதை

V. K. பஞ்சமூர்த்தி

அவர்களின்

புல்லாங்குழல் அரங்கேற்றம்

சிறப்புற வாழ்த்துகிறோம்.

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம்

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(ஏ-2915)

வட மாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

விசேட பொதுக் கூட்டம்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை (26-02-1993) காலை 11-00 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மு. சி. சண்முகராசா,
செயலாளர்.

காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(ஏ-2910)




(ஏ-2917)

அனுதாப அஞ்சலி

அமரர் பொ. சிவசுப்பிரமணியம்

கோப்பாய் தெற்கு தபாற்கந்தோரடியைச் சேர்ந்த
மறைந்த
"சோதிடமேதை"
திரு. நா. பொன்னர் அவர்களின்
கனிஷ்ட புதல்வர்

பொ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

கொழும்பில் 19-02-93ல் காலமான செய்தி மிகுந்த பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் அளிக்கின்றது ஆர்வமும் துடிப்புமமிக்க அவரது பணிகளுக்காக அவர் சார்ந்து இருந்த இந்நிலையம் சிரந்தாழ்த்தி அஞ்சலி செய்கின்றது

பாதியிலே தம் கணவனை இழந்த மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் சகலருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை எமது நிலையம் தெரிவிக்கின்றது.

ஆன்மா சாந்தியடைய இறையருள் கிடைப்பதாக!

சூரியோதய சனசமூகநிலையம்,
கோப்பாய் தெற்கு கோப்பாய்.

(சி-7267)

# மாகாணசபை ஊழியர்க்கும் அரச ஊழியர்களின் சலுகை

## ஜனாதிபதியின் யோசனை ஏற்கப்பட்டது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மாகாண அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று ஜனாதிபதி பிரேமதாசாவினால் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறு வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

பெருந்தொகையான அரசாங்க ஊழியர்கள் தற்போது மாகாண சபைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டதினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-சி)

## கொப்பேகடுவ மரணம்

# காமன்வெல்த்சபை

## விசாரணைக்கு நியமனம்

(கொழும்பு)

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவின் மரணம் குறித்து விசாரணை செய்வதற்கு 'காமன் வெல்த்' நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இக்குழுவில் பொதுநல அமைப்பு நாடுகளின் செயலர் நாயகம் உட்பட ஐந்து வெளிநாட்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (சு-இ)

# வடக்கே படை நடவடிக்கை வேகமில்லை என குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையில் வேகமில்லையென அரசு மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ் குடாநாட்டில் பல மாதங்களாக எதுவித படை நடவடிக்கையும் இடம்பெறாதது குறித்தும் சிலர் குறை கூறியிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை வடக்கிலும் கிழக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவையாளருடனான கலந்துரையாடல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நாளை சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல கிராம சேவையாளரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். (சி)

## வங்கி செயற்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கி யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையில் மகளிர் பொறுப்புக்கு ஆரம்பித்தவர்கள் மாசிமாதத் தவணைப் பணம் செலுத்துவதற்கு வசதியாக நாளை சனிக்கிழமையும் வங்கி அலுவலகம் செயற்படுமென தெரிவிக்கப்படுகிறது. (இ)

## 23 இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தில் 32 தமிழ்ப் பொதுமக்களை படுகொலை செய்த இந்த இராணுவத்தினர்மீதே வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் பொது நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து விசாரிக்கப்படும் சம்பவம் இலங்கையில் இதுதான் முதன் முதலாக உள்ளது. இலங்கையின் மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கவே இலங்கை அரசு இந்த 23 இராணுவத்தினர் மீதும் வழக்குத்தொடர்ந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகிறனர். (சு-சி

## 11 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மேஜர் அச்சுதன் அந்தோனி முத்து ஜோன்சன்-முருங்கன்), கப்டன் பிரின்ராஜ் (கே. வி. ஜெயசேன ஆமெவன்ச மூவிதி மன்னார்), லெப். ராஜசேகர் (கந்தையா தேவராசா கிரான் மட்டக்களப்பு, செங்கோலன் (குசை எட்வேட் குமணயன் குளம் அடம்பன்) லெப். மோகன் அகிலது பசில் (திருச்செல்வம் லூக்காஸ் பேசாலை), லெப். கடவுள் (மகாலிங்கம் நெல்லியடி), 2ம் லெப். இசை அரசன் (யோகேஸ்வரன் பஜேஜ்குமார்-முழங்காவில்), 2ம் லெப். திருமேனி (செல்லையா ஆனந்தீஸ்வரன் யாழ்ப்பாணம்), பரசுராமன் (தர்மபட்டணம் தயானந்தவ-பூநகரி) வாதன் (நீலகண்டன் விஜயகுமார்-மன்னார்), கார்த்திகேயன் செபஸ்தியன் நெவில்சன்-அடம்பன்) வீரச்சாவெய்தினர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த 11 வீரவேங்கைகளுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பு தமது வீரவணக்கத்தைத் தெரிவித்தனர். (வ-சி)

# இளாலி நோக்கி கடும் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினமிரவு ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இளாலிப் பகுதிநோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

அப்பகுதியில் கடந்த வாரத்திலிருந்து தொடர்ச்சியான தாக்குதல்களை படையினர் இரவு பகல் நேரங்களில் மேற்கொண்டுவருகின்றனர்.

இளாலியை நோக்கி படையினர் மேற்கொண்ட ஷெல்கள் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன. அத்துடன் ஹெலி கொப்டரும் அப்பகுதியில் நேற்று அதிகாலை வட்டமிட்டது. [56-156-சி]

## தேநீர் அருந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் தேநீர் அருந்தியதுடன் மயக்கம் அடைந்ததினால் முதலில் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவர்களின் உடல் நிலை குன்றிக் காணப்பட்டதினால் உடனடியாக கொழும்பு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். (வி-இ)

## மன்னூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. ஜி-1, இதற்குரிய எறிகணைகள்-7, ஆர். பி. ஜி. பிறப்பிளர்-7, ரி-51ரக துப்பாக்கிகள்-5 இதற்குரிய ரவைக்கூடுகள்-25, ரி-81 ரவைக் கூடுகள்-1. நடுத்தர ரவைகள்-3023, 40 மி.மீ எறிகணைகள்-8, ஜே ஆர். கைக்குண்டுகள்-4, ஏ கே இயந்திரத்துப்பாக்கி ரவை 1 ஏ. கே. ரவைக்கூட்டு தாங்கி-8, பைகள்- 10 தொலைநோக்கி-1, பரா வெளிச்சக்குண்டுகள்-8, மழைக்கவசம்-6, தலைக்கவசம்-11, தண்ணீர்த்தாங்கி-13, சப்பாத்து ஐந்துசோடி, சாதாரண சப்பாத்து 3 சோடி உட்பட பல இராணுவ தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன. (வ-சி)

## நல்லூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லூர் பிரதேசத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது நிறுவனங்கள் உட்பட சகல தரப்பினரையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மக்களும், பாடசாலை மாணவ மாணவிகளும் கலந்துகொண்டனர். அறிக்கை ஒன்றும் நல்லூர் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. (161-56சி)

## தமிழ் பாடசாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட மோதல் ஒன்றையடுத்தே இப்பாடசாலை தீக்கிரையாக்கப்பட்டதாம். (157-சி

## தொண்டர் நிறுவன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகில உலக செஞ், றெட் பாணு பேருட், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளே திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்களை யாழ். நகர் வரவிடாமல் தடுக்கும் முகமாகவே யாழ் குடாவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கலாமென அவதானிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். [159-சி]

## ஜே. வி. பி. பெரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேற்று 'லங்கா புவத்' தெரிவித்தது.

தெற்கின் பாதுகாப்பு கருதி இப்பகுதிக்கு படையினரை நகர்த்தவேண்டிய நிலை ஏற்படலாமென அரசு தரப்பு கருதுகிறதாம்- இதேவேளை ஜே. வி. பி. யின் பல நடவடிக்கைகளை குறித்து அமைச்சர் வின்சன்பெரேராநாடாளுமன்றில் நேற்று குறிப்பிட்டார். (இ)

## பி. ஜே. பியினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பேரணியின் மீது பொலிஸாரும் இராணுவமும் தடியடி கண்ணீர்புகைக்குண்டு பிரயோகத்தைமேற்கொண்டதினால் மேற்படி கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் உட்பட பல தொண்டர்கள் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

பொலிஸாரின் தடியடிக்குட்பட்ட கட்சியின் மூத்த தலைவர்களான டாக்டர்முரளி மனோகர் ஜோஜி, டாக்டர் ஜெயினும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையின் அவசர சிகிச்சையில் சேர்க்கப்பட்டனர்.

டாக்டர் ஜெயின் ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டார் என்றும், டாக்டர் முரளி மனோகர் ஜோஸி தீவிர வைத்திய பரிசோதனைக்காக அகில பாரத மருத்துவ விஞ்ஞான கழகத்துக்கு உடனடியாக விசேட விமானத்தில் கொண்டு செல்லப்பட்டதாகவும், பொலிஸாரின் தடியடியினால் பல செய்தியாளர்களும் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பி. ஜே. பி. யின் மற்றைய தலைவர்களான திரு. எல் கே. அத்வானியும், திரு அல்பிகாரி வாசிபாயும், தொண்டர்களை அமைதியாக இருக்கும்படி ஒலிபெருக்கிமூலம் கூறிக்கொண்டிருக்கும்போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்கள்.

மேற்படி பேரணியின் நிமித்தம் நேற்று புதுடில்லியில் உள்ள அனைத்து பாடசாலைகள், அரச நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட அனைத்தும் மூடப்பட்டிருந்ததுடன் வாகனப் போக்குவரத்துக்கள் இன்றி வீதிகள் வெறிச்சோடிக்கிடந்ததாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-க-இ)

## இளாலி கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய மூன்று படகுகளும் அதிலிருந்தவர்களும் ஒருவாறு தப்பி கரை வந்து சேர்ந்தனர். இதில் ஒரு படகு பீரங்கித் தாக்குதலில் சேதமுற்றுமுள்ளது.

இதேவேளைவியாபாரநோக்கத்திற்காக இளாலியிலிருந்து ஆலங்கேணி நோக்கி கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி குணம் (28வயது) என்பவரை காணவில்லையாம்.

படகில் இவருடன் சென்ற மற்றைய இருவரும் படகோட்டியும் கடற்படையினரின் தாக்குதலிலிருந்து தப்பி ஒருவாறு கரைவந்து சேர்ந்தனர். (56-156-சி)

## புல்லாங்குழல் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அகில இலங்கை இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நாதஸ்வர இசைமேதை பி. கே. பஞ்சமூர்த்தியின் புல்லாங்குழல் இசை அரங்கேற்றம் இன்று இடம்பெறுகிறது.

மாலை 4 மணிக்கு வைத்திய கலாநிதி ரி. கெங்காதரன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

பிரதமவிருந்தினராக இவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை கலந்துகொள்ளவுள்ளனர். [56-சி]

## மரண அறிவித்தல்

### ஏ. எஸ். கந்தையா

காரைநகர் கிழக்கு களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும், மலேஷியாவில் வாழ்ந்தவருமான அ. சி. கந்தையா அவர்கள் 25-02-1993 வியாழன் அன்று மாலை மூளாய் கிழக்கில் இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னார் பொன்னுவின் அன்புக்கணவரும், க. நாகமணி (சோதிடர் மலேஷியா), க. அம்பலம் தொழில் நிர்வாகி, மலேஷியா), க. பாலசிங்கம் (உதவித்திட்ட அதிகாரி, கொழும்பு), எஸ். கே. சிவலிங்கம் (கிராம சேவை அலுவலர், காரைநகர் மத்தி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நா. தவமணிதேவி, அ. புவனேஸ்வரி, பா. மல்லிகாதேவி, சி. மங்களாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், நா. குணசீலன் (நியூசிலாந்து), நா. ஸ்ரீநிவாசன், நா. விக்கினேஸ்வரன், அ. ஜெயதீசன் (லண்டன்), அ. மலையரசி, பா. தாமரைச்செல்வி, பா. சந்தனச்செல்வி, பா. செந்தூரன், சி. சிவமாலதி, சி. சிவசங்கரி, சி. சிவவேணி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-02-1993 இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு மூளாய் தெற்கு பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ். கே. சிவலிங்கம்
(மகன்)

மூளாய் கிழக்கு,
மூளாய்.

(சி7 268)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் இலக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B